BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# கோவிட் -19 (COVID-19) தொற்று பரவலை முன் கூட்டியே தடுப்பதில் உதவுமுகமாக, ப்ராம்ப்ட்டன் நகர பூங்காக்கள் அனைத்தும் மூடப்படுகின்றன

ப்ராம்ப்ட்டன், ON (மார்ச் 26, 2020) – கோவிட் -19 (COVID-19) தொற்று பரவலை முன் கூட்டியே தடுப்பதில் உதவுமுகமாக, அடுத்த அறிவிப்பு வரும் வரை ப்ராம்ப்ட்டன் நகரில் இருக்கும் 500 க்கும் மேற்பட்ட பூங்காக்கள், பொதுமக்கள் உபயோகத்திற்கு இல்லாதபடி உடனடியாக மூடப்படுகிறது.

இவற்றில் அடங்குபவை:

- விளையாட்டு மைதானங்கள்
- கழுத்துப் பட்டை இல்லாமல் சுதந்திரமாக திரியும் நாய்களுக்கான பூங்காக்கள்
- மைதானத்திற்கு வெளியிலாக நடத்தப்படும் விளையாட்டு வசதிகள் மற்றும் உடற்தகுதிக்கான சாதனங்கள்
- பிக்னிக் நிழற்குடைகள்

நகரில் இருக்கும் பூங்காக்களில், அவற்றை மூடுவதாக கூறுகின்ற அறிவிப்பு பலகைகள் நிறுவப்படும்.

இப்படி பூங்காக்கள் மூடப்படுவது, சமூகத்தில் உடல்ரீதியாக விலகியிருத்தல், மற்றும் பொது அமைப்புக்களில் மக்கள் கூடுதலைத் தவிர்த்தல் ஆகியவற்றை பழக்கப்படுத்திக்கொள்ளுமாறு பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) இனால் கூறப்படும் அறிவுரைகளுடன் இணங்கிப்போவதற்கேயாகும்.

ஏதேனும் பிரச்சனை பற்றி குடியிருப்புவாசிகள் தெரிவிக்க வேண்டுமானால் நகரின் பாதுகாப்பு சேவை அமைப்பினரை 905.874.2111 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

கோவிட் -19 (COVID-19) தொற்று பரவல் சூழலின்போது, ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் என்னவெல்லாம் செய்கிறது என்பதற்கான சமீபத்திய தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/COVID19.

**அறிஞர் கூற்றுக்கள்**

"ப்ராம்ப்ட்டன் நகரில், நமது குடியிருப்புவாசிகளின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியமே எப்போதும் நமது முன்னுரிமை கொண்ட விஷயமாகும் மற்றும் விஷயமாகவும் இருக்கும். கோவிட் -19 (COVID-19) தொற்று மேற்கொண்டு பரவாமல் முன் கூட்டியே தடுப்பதற்காக நாம் செய்ய முடிகின்ற விஷயங்கள்

அனைத்தையும் செய்ய நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். சமூகத்தில் உடல் ரீதியாக விலகியிருத்தல் விதியைக் கடைப்பிடிக்குமாறு நாங்கள் குடியிருப்புவாசிகளை வலியுறுத்துகிறோம்; மற்றும் இதற்கான புள்ளிவிவர வரைகட்டத்தில் ஏற்படும் வளைகோட்டை கிடைமட்ட நேர்கோடாக்குவதற்காக, இந்தச் செய்தியைக் கொண்டு செல்வதற்கான கடுமையான நடவடிக்கைகளை நாங்கள் எடுக்க வேண்டியிருக்கிறது. இந்தச் சமயத்தில் நிலைமையின் தீவிரம் மற்றும் சமூகத்தில் உடல் ரீதியாக விலகியிருத்தல்,  வீட்டிற்குள்ளேயே தங்கியிருத்தலின் முக்கியத்துவம் ஆகியவற்றை குடியிருப்புவாசிகள் புரிந்துகொள்வது முற்றிலும் மிக மிக முக்கியமாகும்."

- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்

"ப்ராம்ப்ட்டனில் இருக்கும் பூங்காக்கள் அனைத்தையும் மூடுவதற்கான இன்றைய அறிவிப்பானது, இன்றைய வேளையில் நமது குடியிருப்புவாசிகள் மற்றும் அலுவல் பணியாளர்கள் அனைவரையும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான எங்கள் கடமையுணர்வுக்கு மறுஉறுதி கூறுகிறது. கோவிட் -19 (COVID-19) தொற்று பரவுதல் என்பது பெரிய பரிமாணம் அடைய முயற்சிக்கின்ற தொற்றாகும்; நாங்கள் நிலைமையை சீராக கண்காணித்து உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்."

- டேவிட் பேர்ரிக்,  தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்

-30-

கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும்,  சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான  ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம்.  Twitter, Facebook, மற்றும்  Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள்.   www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**

மோனிக்கா துக்கல்

ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய  ஈடுபாடு

யுக்திரீதியான தகவல் தொடர்பு

ப்ராம்ப்ட்டன் நகரம்

*905-874-3426 | Monika.Duggal@brampton.ca*